(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | |
|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | CC.No.1447/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | சந்தனராஜ் |
| த/பெ | : | ஜெயராஜ் |
| கிராமம் | : | இடிந்தகரை |
| வட்டம் | : | இராதாபுரம் |
| சாதி | : | எஸ்.சி |
| அழைத்தல் | : | கடல் தொழில் |
| மதம் | : | கிறிஸ்தவர் |
| வயது | : | 60 |

( 1, 3, 4 எதிரிகள் ஆஜர், 2, 5 வது எதிரிகள் ஆஜர் இல்லை கு.வி மு.ச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை** :–

1) நான் தற்போது இடிந்தகரையில் வசித்து வருகிறேன். நான் கடல் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் 1,3,4 எதிரிகளை தெரியும். வழக்கின் 2,5 எதிரிகளை தெரியும்.

2) வருடம் நினைவில் இல்லை. ஜனவரி 07 ம் தேதி, சுமார் 6 வருடத்திற்கு முன்பு நான் கடலுக்கு போய்விட்டு வந்த போது என் மனைவி வளர்மதி 1 வது

எதிரி ரோஜாவிற்கு ரூ.300/– வாங்கி இருந்தார், அவர் அதை திருப்பி கொடுத்து விட்டார். ஆனால் எதிரி பணம் திருப்பி கொடுக்கவில்லை என்று கூறி மதியம் என்னிடம் தகராறு செய்தார்.

3) மாலை 06.00 மணிக்கு மேல் நான் கடற்கரைக்கு சென்று மீண்டும் வீட்டிற்கு வந்த போது ஆஜர் 1வது எதிரி என் வீட்டின் முன்பு நின்று மேற்படி பணத்தை கேட்டு என் மனைவியிடம் அசிங்கமாக ஏசி பிரச்சனை செய்து கொண்டு இருந்தார். நான் என் மனைவிதான் கொடுத்துவிட்டார் என்று கூறுகிறாளே எதற்கு 300 ரூபாய்க்கு பிரச்சனை செய்கிறீர்கள் என்று கூறினேன். உடனே 1வது எதிரி போன் மூலம் அவரது மகன், மகள் பிள்ளைகளான ஆஜர் எதிரிகளையும், வழக்கின் எதிரிகளை அழைத்தார். அவர்கள் என் வீட்டுக்கு அருகில் வந்து எதிரி டென்னிஸ் என்னை காரை கம்பி கொண்டு என் இடது, வலது பக்க தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். நான் நிலை தடுமாறி கீழே விழுந்ததும் எதிரி குமார் என்னை நெஞ்சில் மிதித்தார். உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டினார்.

4) சம்பவத்தை பார்த்த என் மகள் நித்தியா தடுத்த போது அவரை எதிரி குமார் கையால் அடித்தார். எதிரி ஆசார், அஜய் ஆகியோர்களை என்னை கையால் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். ஆஜர் எதிரிகள் என் மகளையும் அடித்தார்கள். சம்பவத்தை பார்த்த லெனின் என்பவரும் என் மகளும் என்னை கூடன்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அதன்பின்பு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். அங்கு போலிசார் என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை. (1,3,4 எதிரிகள் ஆஜரில் இருந்தும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணைக்கு வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை).

(ஒம்)..../–திரு.மு.ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
இராதாபுரம்.